# இளையோர் கொள்கை வரைபு
# நிகழ்ச்சித்திட்டம்

## தென் மாகாணத்துக்கான
## பங்காளிகள்
## ஆலோசனைச் சுருக்கம்

2016

## இலங்கை UNFPA



கடந்த நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக இலங்கை ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியமானது (UNFPA) பாலியலும் இனப்பெருக்க சுகாதாரம், பெண்கள் மற்றும் இளையோர்களின் உரிமைகள் எனும் விடயங்களில் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றிவருகின்றது. அண்மையில் இலங்கை ஒரு மத்திய வருமான நாடாக மாற்றமடைந்ததுடன், UNFPA ஆனது இலங்கையின் பிரதான நான்கு இளையோர் பிரச்சினைகளையும் எதிர்கொள்வதில் அதன் நோக்கை திறன் மேம்பாடு மற்றும் சேவை வழங்கள் என்பதிலிருந்து கொள்கை மட்டக் கலந்துரையாடல், கொள்கை ஆலோசனை மற்றும் கொள்கை ஆதரவு என்பனவற்றின் பால் செலுத்தியுள்ளது. இளையோர்களுக்கு வேண்டிய சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொள்வதில் அவர்களை பின்னடையச் செய்துள்ள பல சவால்கள் உள்ளன. அவற்றை வருமாறு வகைப்படுத்தலாம்:

1. **கலாசார மற்றும் சமூகத் தடைகள்**
2. **முழுமையான இனப்பெருக்க சுகாதாரக் கல்வியைப் பெறுவதில் உள்ள வரையறைகள்**
3. **இளையோர்களுக்கு இனப்பெருக்க சுகாதாரக் கல்வியைப் பெறுவதில் உள்ள வரையறைகள்**
4. **இளையோர் உள்ளார்த்தங்களை அங்கீகரிக்கும் வகையிலான சூழல் இல்லாமை**

**ஏன் இளையோர் விடயத்தில் முதலீடுசெய்கின்றோம்?**

கட்டிளமைப் பருவத்திலிருந்து பருவநிலையை அடையும் வரையான காலப்பகுதி பாதுகாப்பானதும், வெற்றிகரமானதுமானதுமாக அமைவது அனைத்துப் பிரஜைகளினதும் உரிமையாகும். ஒரு ஆரோக்கியமான, ஆக்கத்திறன்மிக்க, பூரணத்துவமிக்க வாழ்க்கைக்கு வேண்டிய அறிவு, திறன்கள் மற்றும் இசைவுத்தன்மையை பருவ வயதை அடைந்தவர்கள் மற்றும் இளையோர்கள் உறுதிசெய்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்க, குடும்பங்களும் சமூகங்களும் முதலீட்டில் கவனம் செலுத்தப்படுமிடத்து மாத்திரமே

## இலங்கை UNFPA இளையோர் நிகழ்ச்சித்திட்டம்

இலங்கை UNFPA இன் இளையோர் நிகழ்ச்சித்திட்டமானது ஒரு முழுமையான நிகழ்ச்சித்திட்டமாகும். இது தேசிய மற்றும் மாகாண மட்டத்தில், குறிப்பாக இளையோர்களை அடிப்படையாகக் கொண்ட கொள்கை வகுப்பு, கொள்கை அமுலாக்கம், இளையோர் தலைமைத்துவம் மற்றும் முழுமையான இனப்பெருக்கக் கல்வி (CRHE) எனும் விடயப்பரப்பில் இளையோர்களை அபிவிருத்தியில் மையப்படுத்தி நோக்குகின்றது.

### மாகாண ரீதியான இளையோர் கொள்கைத் திட்டம்


சனத்தொகையில் காற்பகுதி இளையோர்களாக இருப்பதனால், தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் உறுதியான இளையோர் கொள்கை இருக்க வேண்டும் என இலங்கை UNFPA கருதுகின்றது. தேசிய மட்டத்தில் பொதுவாக உள்ள சில சவால்கள் வெவ்வேறு மாகாணங்களுக்கும் பிரத்தியேகமானதாகவும் உள்ளன. இளையோர்கள் விடயத்தில் முதலீடு செய்யும் போது இந்த சவால்களை இனங்கண்டு ஒரு முழுமையான அணுகுமுறை உறுதிசெய்யப்படுவது இன்றியமையாததாகும். இந்த திட்டத்தின் ஊடாக

இலங்கை UNFPAயானது முழுமையானதொரு இளையோர் கொள்கையை வகுப்பதற்கான தொழில்நுட்ப உதவிகள் மற்றும் ஆதரவுடன் அனைத்து மாகாணங்களிலும் பணியாற்ற உத்தேசித்துள்ளது.

தற்போது தென் மற்றும் சபரகமுவ மாகாண சபைகள் இளையோர் கொள்கை வரைவுகளை ஆவணப்படுத்தியுள்ளதுடன் அவை இறுதிக் கட்டத்தை அடையும் தறுவாயில் உள்ளன.

## குடித்தொகைப் பங்கிலாபத்தின் பயன்களைப் பெறல்

காலாகாலமாக அரசானது இலவசக் கல்வி மற்றும் இலவச மருத்துவ வசதிகள் ஊடாக தொடர்ந்தும் இளையோர்கள் விடயத்தில் முதலீடுசெய்து வருகின்றது. இருப்பினும், கடந்த நான்கு தசாப்த காலப்பகுதியில் இளையோர் அபிலாசைகளுக்கும் அரசக்கும் இடையில் தொடர்ச்சியாக ஏற்பட்ட முரண்பாடு அரசை வன்முறைகளுடனான மூன்று கிளர்ச்சிகளை எதிர்கொள்ளச் செய்துள்ளது. அதன் விளைவாக, இளையோர்களால் அவ்வாறானதொரு பதில் நடவடிக்கை எடுக்கப்பட்டதற்கான காரணத்தை விளக்க பாரிய முயற்சிகள் எடுக்கப்பட்டன. இங்கு வறுமை, தொழிலின்மை, மற்றும் இளையோர்களைப் புறம்தள்ளுதல் என்பன பிரதான மூலங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்தப் பின்னணியில் UNFPAயானது இளையோர்களை அபிவிருத்தியின் மையப்பகுதியாகக் கொள்வதுடன், அவர்களது முழுமையாக உள்ளார்த்தத்தை அடைய அனுமதிக்கும் வகையிலான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது.




தற்போதைய இலங்கையின் 20.4 மில்லியன் சனத்தொகையில் 4.4மில்லியன் பேர் (15-29) இளையோர்களாவார். இலங்கை இந்த சனத்தொகைப் பங்கிலாபத்தின்* பயனை அடைய, இலங்கை UNFPA ஆனது இளையோர்கள் மற்றும் பருவவயதை அடைந்தவர்கள் சார்பான இனப்பெருக்க சுகாதார சேவைகளை வழங்குவதுடன் அதனுடன் சார்ந்த உரிமைகளை பூர்த்திசெய்வதனை உறுதிசெய்வதில் தேசிய, உப தேசிய நிறுவனங்கள் மற்றும் ஏனைய பங்காளர்களையும் ஒருங்கிணைத்து சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறைக்கு உதவிவருகின்றது. மேலும், சாதகமான கொள்கை சூழல் மற்றும் நடைமுறைகளை உருவாக்குவதன் ஊடாக இலங்கை UNFPA ஆனது இளையோர்களுக்கு தலைமைத்துவத்தை எடுக்க வழிவகுப்பதுடன் சமாதானம் மற்றும் நிலையான அபிவிருத்தியை நோக்கிய நாட்டின் இடைமாறுநிலைக்கும் பங்களிப்புச் செய்கின்றது.

## ஓர் இளையோர் கொள்கையில் முழுமையான இனப்பெருக்க சுகாதாரக் கல்வி (CRHE) ஏன் உள்ளது?

இளையோர்களின் பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதாரம் மற்றும் உரிமைகள் மீதான முதலீடானது இளையோர்கள் சமத்துவமாகவும், நலமாகவும் வாழ்வதற்கும், தமது முழுமையான உள்ளார்த்தத்தை அடைவதற்கும் தமது சமூகத்தின் நிலையான அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வதற்கும் மிகவும் இன்றியமையாததாகும். பாலியல் மற்றும் இனப்பெருக்கத் தொகுதியுடன் தொடர்பான அடிப்படை உடற்கூற்றியல் மற்றும் உடலியல் விடயங்களை இளையோர்கள் அறிந்திருக்க

**இளையோர்கள் வளர்ந்து குடும்பப் பொறுப்புக்களை கையில் எடுக்க உள்ள நிலையில் CRHE இளையோர்களின் சுகதாரம் மற்றும் சுகநலத்தை வலுப்படுத்த உதவுகின்றது.**

*Sri Lanka 25 million people and implications population and housing projections 2012-2062 by De Silva, W. Indralal, De Silva, Ranjith (UNFPA, 2015),*

வேண்டும். அது அவர்களுக்கு தமது வாழ்வில் சரியான சந்தர்ப்பத்தில் அறிவுபூர்வமான தீர்மானங்களை எடுக்க உதவும். பிழையான கருத்துக்களும், போதிய அறிவின்மையும் ஆற்றலின்மையும் இளையோர்களை தமது முழுமையான உள்ளார்த்தத்தை அறிய முடியாது தடுக்கின்றன.

## தென் மாகாண இளையோர் கொள்கையை நோக்கி




இலங்கை UNFPAயானது வட மாகாண சபையுடன் நீண்டகால உறவை வைத்துவருகின்றது. யுத்தகாலத்திலும், மீள் குடியேற்றம் உள்ளிட்ட உடனடி மீள்குடியேற்றத்தை அடுத்தும், இனப்பெருக்க சுகாதார பராமரிப்பு சேவைகள், கர்ப்பிணித் தாய்மார்களுக்கான பிரசவகால உதவிப் பொருட்கள், பெண்கள் மற்றும் யுவதிகளுக்கான துப்புரவுதுவாய்கள் வழங்கப்பட்டு இனப்பெருக்க சுகாதார வசதிகள் உறுதிசெய்யப்பட்டன. இந்தப் பின்னணியுடன் இலங்கை UNFPA யானது மாகாண இளையோர் கொள்கையை விருத்திசெய்வதில் தற்போது வடமாகாண சபையின் இளைஞர் விவகார அமைச்சுடன் இணைந்து பணியாற்றிவருகின்றது. இந்த முயற்சியை அடையுமுகமாக அரசாங்கம், கூட்டுறவு, சிவில் சமூக மற்றும் இளையோர் தலைவர்கள் உள்ளிட்ட அனைத்து பங்காளர்களும் ஒன்றிணைக்கப்படுவார்கள். இது வடமாகாண இளையோர்களின் குறித்த தேவைகளை அடையாளங்கண்டு இளையோர்களை மையப்படுத்தியதொரு கொள்கையை வரைவதற்கு மாகாண சபைக்கு வேண்டிய ஆதரவையும் உதவிகளையும் வழங்கவதற்கான பணியை ஆரம்பிப்பதை இலக்காகக் கொண்டுள்ளது.

- **இளையோர்கள் தீர்மானமெடுத்தலில் பங்கேற்றல் மற்றும் நிலையான அபிவிருத்திச் செயன்முறைக்குப் பங்களிப்புச் செய்வதில் முக்கிய பங்குவகித்தலுக்குச் சாதகமான சூழலை உருவாக்கல்.**
- **முழுமையான இனப்பெருக்க சுகாதாரக் கல்வியும் அதனுடன் இணைந்த உரிமைகளும் ஊடாக இளையோர்களை வலுவூட்டல்**

**தென் மாகாண இளையோர் சுகாதாரத்தில் மாவட்டரீதியான வேறுபாடுகள்**

- குருணாகலை (4.1%) மற்றும் மாத்தறை (4.6%) மாவட்டங்களோடு ஒப்பிடுகையில் சப்ரகமுவ மாகாணத்தை சேர்ந்த **அம்பாந்தோட்டை** மாவட்டத்தில் (5.4%) பதின்ம வயதில் கருவுறும் வீதம் அதிகமாக காணப்படுகிறது.
- தேசிய நிலையுடன் (8.8/ 1000 பிறப்பு) ஒப்பிடுகையில் சிசு மரண விகிதம் **தென் மாகாணமாத்தின் மூன்று மாவட்டங்களிலும் குறைவாகவே காணபடப்படுவது குறிப்பிடதக்கது.**
- தேசிய நிலையுடன் (32.5/ **100,000 இறப்பு**) ஒப்பிடுகையில் **அம்பாந்தோட்டை** (39.8/**100,000 இறப்பு**) ***பிரசவ தாய் இறப்பு*** விகிதம் அதிகமாகும் ஆயினும் காலி மாவட்டமானது (27.4) குறைவான வீதத்தை கொண்டுள்ளது.



**தென் மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் வட மாகாணத்தில் இளையோர் கல்வி முன்னேற்றம்**

- தேசிய சராசரியுடன் ஒப்பிடுகையில் **(40.7%) இரண்டாம் தரக் கல்வியில் மாத்தறை மாவட்டத்தில்** (40.2%) குறைந்த நிலையில் உள்ளது. மற்றும் க.பொ.த. **சா/த (16.2%), உ/த (11.6%)** மற்றும் **உயர் கல்வி (2.3%)** மட்டங்கள் தேசிய சராசரியிலும் பார்க்க மிகக் குறைவாக உள்ளது (ஒழுங்குமுறைப்படி 17%, 12.3% மற்றும் 2.7%).
- தேசிய நிலையுடன் ஒப்பிடுகையில் **தென் மாகாணம்** குறைந்த **(24.8%)** கணணி பயன்பாட்டு அறிவைக் கொண்டுள்ளனர் (தேசிய மட்டம் - 25.1%).

*Department of Census and Statistics Ministry of Policy Planning Economic Affairs, Child Youth and Cultural Affairs, Sri Lanka Labour Force Survey Annual Report – 2014 and Sri Lankas Socio-Economic Data – Central Bank June 2015

**தென் மாகாணத்தில் தொழிலற்ற இளையோர் புள்ளிவிபரம்**

- தேசிய சராசரியுடன் **(3.8%)** ஒப்பிடுகையில் **தென் மாகாண த்தில் (4.3%) தொழிலற்றோர் வீதம் அதிகமாகும்.**
- தேசிய சராசரியுடன் ஒப்பிடுகையில் **(15.2% மற்றும் 40.2%)** தென் மாகாண **(16% மற்றும் 34.7%)** அரச மற்றும் முயற்ச்சியாண்மை துறை ஊழியர்களின் எண்ணிக்கை அதிகம். ஆனால் தேசிய சராசரியுடன் **(40.5%)** ஒப்பிடுகையில் தென் மாகாண **(38.9%)** தனியார் தொழில்துறை ஊழியர்களின் தொகை குறைவாகும்.
- *Department of Census and Statistics Ministry of Finance and Planning, Sri Lanka Labour Force Survey Annual Report - 2013

## ஓர் இளையோர் கொள்கையைப் பெறுவதில் கடைப்பிடிக்கப்படும் செயன்முறைகள்

**மையப் புள்ளி** – திட்டமிடல் படிமுறைகளை ஒழுங்கமைப்பதற்காக குறித்த மாகாணத்தின் மாகாண இளையோர் விவகார அமைச்சு மையப் புள்ளியாக நியமிக்கப்படுகின்றது. மாகாண அமைச்சர் செயலாளர் அல்லது மாகாண அமைச்சினால் நியமிக்கப்பட்ட அதிகாரியொருவர் தலைமைத்துவத்தை பெறுப்பேற்று முன்னெடுப்பார்.

## பங்காளர் ஆலோசனை



முதல்படியாக அரச துறை, தனியார் துறை, சிவில் சமூக, சமயத் தலைவர்கள் மற்றும் இளைய தலைவர்களிலிருந்தான தனிநபர்களை ஒன்றிணைத்த ஒரு உயர்மட்ட பல் பங்குதாரர் கலந்தாலோசனை நடைபெற்றது. கொள்கை வகுப்பு மற்றும் இளையோர்களுடன் தொடர்பாக பரவலாகக் கலந்துரையாடப்பட்ட தொழில் வாய்ப்புக்கள், கல்வி, இனப்பெருக்க சுகாதாரம், சமூக மற்றும் குடியியல் பங்கேற்பு எனும் விடயப்பரப்பில் தற்போதைய போக்கு மற்றும் இடைவெளிகளை அறிவதில் அவர்கள் தமது புலமையையும், ஆற்றல்களையும் வழங்கியுள்ளனர். கொள்கை வகுப்புக்காக இந்த கலந்தாலோசனையிலிருந்து பெறப்பட்ட பரிந்துரைகளின் ஒரு வரைவு கீழே தரப்பபட்டுள்ளது. இந்தப் பரிந்துரைகளை ஒன்றிணைத்து **ஒரு நகல் கொள்கை வரைவைத்** தயாரிப்பதற்கானதொரு இயக்கக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவில் தென் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தலைமைவகிப்பதுடன் தென் மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலிருந்துமான (காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை) தெரிவுசெய்யப்பட்ட துரைசார் நிபுணர்கள் மற்றும் இளம் தலைவர்களும் உள்ளடங்குகின்றனர். அதன் பின்னர் கால அவகாசம் மற்றும் குறிகாட்டிகள்

அடங்களாக கொள்கை அமுலாக்கத்தின் முன்னுரிமை பகுதிகளின் அடிப்படையில் செயற்பாடுகள் இனங்காணப்படும். உயர் சர்வதேச தரத்திலான செயற்பாடுகளை உறுதிசெய்யும் வகையில் இலங்கை UNFPA யானது கொள்கை அமுலாக்கத்துக்கான தொழில்நுட்ப ஆலோசனைகளுடனான உதவிகளை தொடர்ந்தும் வழங்கும்.

இந்த கலந்தாலோசனை நிகழ்வானது கௌரவ மாகாணசபை அமைச்சர், செயலாளர் மற்றும் மாகாண சுகாதாரப் பணிப்பாளர் மற்றும் குறித்த அமைச்சுக்களின் சிரேஷ்ட உத்தியோகத்தர்களின் ஆதரவுடன் நடைபெற்றது. மேலும், தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் மாகாண மற்றும் மாவட்ட மட்ட உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலகங்களின் இளைஞர் உத்தியோகத்தர்கள், தொழில் பயிற்சி நிலையங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களின் மாணவர்கள், அனைத்து சமூகங்கள், பிரதேசங்களினதும் இளம் தலைவர்களும் பங்கேற்றனர். இந்த கலந்தாலோசனையை அடிப்படையாகக் கொண்டு பரிந்துரைகளுடனான ஒரு நகல் அறிக்கையை வறுமை பகுப்பாய்வுக்கான மையம் (CEPA) தயாரித்துள்ளது.

2015 டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஒரு பல்தரப்பு பங்காளர் கலந்தாலோசனை மற்றும் தென் மாகாண கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட பல்வேறு ஆலோசனைக் கூட்டங்களினதும் பெறுபேறாகவே பின்வரும் பரிந்துரைகள் உள்ளன. தேசிய மற்றும் நிலையான அபிவிருத்தி இலக்குகள் (SDGs) உள்ளிட்ட இந்த பரிந்துரைகள் சர்வதேச மற்றும் மாகாண மட்ட அபிவிருத்திகளில் கருத்தில் கொள்ளப்படும். பின்வரும் அனைத்துப் பரிந்துரைகளிலும் இளையோர்களின் பற்கேற்பு மற்றும் பங்களிப்பையும் அமுலாக்கத்தின் அனைத்து நிலைகளையும் கொண்டுள்ளமை முக்கியமானது. 15-29 வயதுக்கு உட்பட்டவர்கள் இளையோர்களாகக் கருதப்படுகின்றனர் (தேசிய இளைஞர் கொள்கை, இலங்கை *2014*)



வறுமை பகுப்பாய்வுக்கான மையம் (CEPA) இந்த கலந்தாலோசனையை ஒருங்கமைத்தது. மூன்று பரந்துபட்ட பிரிவுகளின் கீழ் இந்த பரிந்துரைகள் கீழே குறிப்பிடப்பட்டவாறு கலந்துரையாடப்பட்டது.

## பரிந்துரைகளின் சுருக்கம்*



- **இளைய சமுதாயத்துக்கான சந்தர்ப்பங்கள் –** யுத்தத்துக்குப் பிந்திய பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தியை கவனத்தில் கொள்ளுமிடத்து, இளைஞர்களுக்கான சந்தர்ப்பங்கள் உரிய நேரத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.
  - சுற்றுலாத்துறை – இயற்கையை அடிப்படையாகக் கொண்ட / சூழல்சார் சுறற்றுலாத்துறை மற்றும் ஏனைய அபிவிருத்தி மையங்களை விருத்திசெய்தல்
  - விவசாயம் மற்றும் பெருந்தோட்டத்துறை – புதிய தொழில் நுட்பங்கள் மற்றும் முறைமைகளைப் பிரயோகித்தல் அறிமுகப்படுத்தப்பட்டு இத்துறையினுள் தமது திறன்கள் மற்றும் பெறுமானங்களை விருத்திசெய்துகொள்ள இளைய தலைமுறையினர் ஊக்குவிக்கப்படுவர்.
  - மீன்பிடி – முறைசார் முறைமைகள் ஊடாக, தொழில்/வியாபாரத்துக்கான அடைவை அதிகரிப்பதில் சமத்துவமான கல்வி, திறன்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சிக்கான சமத்துவமான அடைவை உறுதிசெய்வதில், டிப்ளோமாக்கள் மற்றும் ஏனைய அடிப்படைகளின் ஊடாக கடல்சார் பல்கலைக்கழகங்களுக்கு இளைஞர்களை இணைத்தல்
  - மரபுரீதியான, மரபுரீதியற்ற மற்றும் தொழில்முயற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மேலும் விருத்திசெய்யப்பட்டு அது உபாயரீதியான முறையில் சுற்றுலாத்துறை உள்ளிட்ட விருத்தியுரும் சந்தைகள் மற்றும் கைத்தொழில்களுடன் இணைக்கப்படும்.

- **இளையோர் வலுவூட்டல் –** இளையோர்கள் முறைசார் மற்றும் முறைசாரா துறைகள் இரண்டிலும் உள்ளனர் என்பதைப் புரிந்து அவர்களுக்கு உரிய நிறுவனங்கள் மற்றும் தேவையான திறன் மேம்பாடு மற்றும் சமூகத்தில் முழுமையாகப் பங்கேற்கதற்கான உரிய அடைவு வழங்கப்பட வேண்டும். விஷேடமாக முறையாக அமைப்புக்களில் தொடர்ந்தும் இருக்கப்பதில் தோல்வியுற்றவர்கள்.
    - மொழி உரிமைகளை அங்கீரித்தல், கலாசார மற்றும் பண்புடனான விழுமியங்களை மேம்படுத்துவதில் மற்றைய சமயங்களையும் மரபுகளையும் கற்பதன் முக்கியத்துவம், மரபுகள், முழுமையான இனப்பெருக்க சுகாதாரக் கல்வியின் முக்கியத்துவம் உள்ளிட்ட அங்கீகாரங்கள் ஊடாக நீதி மற்றும் சமத்துவத்தை மேம்படுத்தல். கிராமியப் பாடசாலைகளின் ஆசிரிய, பயிற்சிகள், தகவல் தொழில்நுட்ப வசதிகள் ஆகியனவற்றை விருத்திசெய்ய நடவடிக்கை எடுத்தல்.
    - தொழில் பயிற்சியும் திறன்கள் மேம்பாடும் – திறன்கள் மேம்பாட்டுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் நிறுவனங்கள் வறிய மக்களுக்கும் கிடைக்கும் வகையில் கடன் திட்டங்கள் மற்றும் எனைய முறைமைகளை அறிமுகம் செய்தல். சத்வதேச மட்டத்தில் அங்கீகாரம் பெறும் வகையில் உள்நாட்டு பட்டங்கள் மற்றும் டிப்ளோமாக்களின் தரத்தை அதிரித்தல். கிடைக்கப்பெறும் சிறந்த வசதிகள் மற்றும் பயிற்றுவிக்கப்பட்ட பயிற்சியாளுர்களின் கிடைப்பனவை உறுதிசெய்யும் வகையில் தொழில் பயிற்சி உட்கட்டமைப்பில் முதலீடு செய்தல்
    - சுகாதாரமும் சுகவாழ்வும் – விளையாட்டுக்கான அடைவை விருத்தி செய்வதில் இளையோர் கழகங்களுக்கான போதிய நிதி உதவிகளை ஒதுக்கீடு செய்தல். அனைத்து மட்டங்களிலும் உள உடல் பற்றியதொரு முழமையான கல்வியை உறுதிசெய்யும் வகையில் முழுமையான இனப்பெருக்க சுகாதாரக் கல்வி மற்றும் அறிவை அறிமுகம் செய்தல்.
    - விளையாட்டும் கலையும் – சிறந்த வாழ்வுக்கு வழிவகுக்கவும் தொடர்பாடல் திறன்களை விருத்திசெய்யவும் விளையாட்டு மற்றும் கலைத் துறையில் இளையோர்களை ஊக்குவிப்பதில் காலி இலக்கிய விழா போன்ற சர்வதேச நிகழ்ச்சித்திட்டங்களை பிரயோகித்தல்.

**இளையோர்களுக்கான பாதுகாப்பு வலை**

- சமய மற்றும் கலாசார நிறுவனங்களுடனான பாடசாலைகளை செயற்பாட்டுரீதியான பாடசாலைசார் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயலமர்வுகளுடன் தொடர்புபடுத்துவதன் மூலம் இளையோர்களின் உள்ளார்த்தத்தை மட்டுப்படுத்தும் உளப்பாங்கை மேம்படுத்தல்
- இளையோர் பங்கேற்பும் அரசியல் பிரதிநிதித்துவமும் – சமூகங்கள் மற்றும் தேசிய மட்ட சகாக்களுடனான நம்பிக்கையை மீள் கட்டியெழுப்புவதில் உள்ளூராட்சி மட்டத்தில் அர்த்தமிக்க பங்கேற்புடனான இளையோர் பிரதிநிதித்துவத்தை விருத்திசெய்தல்
- வறுமை, ஓரங்கட்டப்படல் மற்றும் அவற்றுடன் தொடர்பான சமூகப் பிரச்சினைகள் – இனப்பெருக்க சுகாதாரக் கல்வியை அறிமுகம் செய்தல் மற்றும் பாலியல் ரீதியாக பரவலாக்கமடையும் நோய்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தலுக்கான ஒதுக்கப்பட்ட இளையோர் குழுக்களை (சாதி, பிரிவு மற்றும் சமய அடிப்படையிலான) உள்ளடக்குவதற்கான பொறிமுறையை அறிமுகம் செய்தல்

*இவை வெளியார் ஆலோசர்கள் மற்றும் இலங்கை வறுமை பகுப்பாய்வு மையம் (CEPA) மூலம் தொகுக்கப்பட்ட ஆலோசனைக்குப் பின்னரான அறிக்கைகளிலிருந்தான புரிந்துரைகளின் சுருக்கமாகும். இந்த அறிக்கை பற்றிய மேலதிக விபரங்களை இலங்கை CEPA அல்லது இலங்கை UNFPA ஐ தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

## UNFPA இளையோர் நிகழ்ச்சித்திட்ட வெளியீடுகள்





20.4 Million: Sri Lanka's
Population at a glance
(2015)




100 Voices Campaign
Leading for Change
(2015)




National Youth Health
Survey 2012/2013
(2016)




Generation to Generation
Dialogue
Available in Sinhala and Tamil
(2015)



Behaviour Change
Communication Strategy for
Reproductive Helath
Programmes in Sri Lanka
(2014)




Delivering for Women
and Young People
(2014)

### மேலதிக விபரங்களுக்காக:


தொடர்பு: நிஷான் குணசேகர-ஆலோசகர், கொள்கை பகுப்பாய்வாளர் – இளமை மற்றும் இளையோர்கள்

இலங்கை ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம், 202, பௌத்தாலோக மாவத்த, கொழும்பு 07

மின் அஞ்சல்: ngunasekera@unfpa.org, தொலைபேசி: + 94 (011) 2580840


www.srilanka.unfpa.org

www.twitter.com/UNFPASriLanka

www.facebook.com/unfpa.srilanka